# தேச பக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:152 ★02.10.2026 ★தமிழ் நாளிதழ் ★வெள்ளிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:152 ★02.10.2026 ★TamilDaily ★Friday ★Page-4 ★Price-₹5/- Chennai




## செங்கம் பகுதியில் ஆட்சியர் வந்தனா கார்க் அதிரடி ஆய்வு: மருத்துவம் முதல் குடிநீர், தூய்மை வரை அனைத்து பணிகளும் நேரில் கண்காணிப்பு!

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் அரசுத் துறைகளின் பணிகளை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் நேற்று (01.10.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கால்நடை மருத்துவமனை, கிளை நூலகம், ஊரக வளர்ச்சிப் பணிகள், அரசு மருத்துவமனை, நியாய விலைக் கடை, மாணவியர் விடுதி, ஏரி மற்றும் கிராம நிர்வாக அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடிக்கவும், பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

கால்நடை மருத்துவமனையில் ஆய்வு

பாச்சல் ஊராட்சியில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனையை ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மருத்துவமனையின் செயல்பாடுகள், மருந்துகளின் இருப்பு, கால்நடைகளுக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் உள்ளிட்ட விவரங்களை கேட்டறிந்தார்.

கால்நடைகளுக்கு முறையாக சிகிச்சை வழங்கப்படுகிறதா, தேவையான மருந்துகள் போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்தார். தொடர்ந்து பாச்சல் ஊராட்சியில் உள்ள கிளை நூலகத்தை பார்வையிட்டு அதன் செயல்பாடுகள், புத்தகங்களின் இருப்பு மற்றும் பராமரிப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தூய்மைப் பணியை பார்வையிட்டு மரக்கன்று நடவு

பாச்சல் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) – 'தூய்மையே சேவை 2026' திட்டத்தின் கீழ் நடைபெற்ற 'ஒரு நாள், ஒரு மணி நேரம் ஒன்றாக' தன்னார்வ தூய்மைப் பணியை ஆட்சியர் பார்வையிட்டார்.

தொடர்ந்து மரக்கன்றுகளை நட்டு வைத்து, சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் சாலையோரங்களில் தேங்கியுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ரூ.13.01 லட்சத்தில் புதிய சமுதாயக் குளம்

கரியமங்கலம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் விபிஜி ராம் ஜி திட்டத்தின் கீழ் ரூ.13.01 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய சமுதாயக் குளம் அமைக்கும் பணியை ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பணிகள் நடைபெறும் விதம், பணியில் ஈடுபட்டுள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை, மாற்றுத்திறனாளி பணியாளர்களின் எண்ணிக்கை, வருகைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்கள் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்தார். பணிகளை தரமாகவும் விரைவாகவும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதே பகுதியில் RRGSA (சீரமைக்கப்பட்ட ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் அபியான்) திட்டத்தின் கீழ் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலக கட்டிடத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செங்கம் அரசு மருத்துவமனையில் விரிவான ஆய்வு

செங்கம் அரசு பொது மருத்துவமனையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் இதுவரை வழங்கப்பட்ட தங்க மோதிரங்களின் எண்ணிக்கை மற்றும் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்.

தாய்–சேய் தொடர்பான விவரங்களை பதிவு செய்ய பயன்படுத்தப்படும் செயலி முறையாக செயல்படுகிறதா என்பதையும் கேட்டறிந்தார். தாய்மார்களை நீண்ட நேரம் காத்திருக்க வைக்காமல், தகுதியான பயனாளிகளுக்கு திட்டத்தின் பயன் விரைந்து கிடைப்பதை உறுதி செய்ய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் குழந்தைகளின் தாய்மார்களுக்கு தங்க மோதிரங்களை வழங்கினார்.

மேலும் மருத்துவமனையின் ஒட்டுமொத்த செயல்பாடுகள், பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள், அடிப்படை வசதிகள் உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்தார். சிகிச்சைக்காக வந்த பொதுமக்களிடம் நேரடியாக குறைகளையும் கேட்டறிந்தார்.

மருத்துவமனை அருகே தேங்கியிருந்த கழிவுநீரை உடனடியாக வெளியேற்றி, அப்பகுதியை சுகாதாரமாக பராமரிக்க வேண்டும் என்றும், மருத்துவமனை மற்றும் அதன் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்றும் பொதுப்பணித் துறை அலுவலர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

10 பேருக்கு குடும்ப அட்டை

செங்கம் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு, பொருட்கள் முறையாக விநியோகிக்கப்படுகிறதா, விநியோகம் தொடர்பான பதிவேடுகளில் விவரங்கள் முறையாக பதிவு செய்யப்படுகிறதா என்பதையும் ஆட்சியர் ஆய்வு செய்தார்.

குடும்ப அட்டை கோரி மனு அளித்திருந்த 10 பேருக்கு குடும்ப அட்டைகளை வழங்கினார்.

மாணவியர் விடுதி, சமையல் கூடத்தில் ஆய்வு

செங்கம் தளவநாய்க்கன்பேட்டையில் உள்ள சமூகநீதி பள்ளி மாணவியர் விடுதி மற்றும் சமையல் கூடத்தையும் ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

விடுதியில் மாணவியர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், உணவு தயாரிக்கும் இடத்தின் சுகாதாரம் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்த அவர், விடுமுறை நாட்கள் முடிவடைவதற்குள் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி, மாணவியர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான சூழலை உறுதி செய்ய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஏரியில் சீமைக் கருவேல மரங்கள் அகற்றும் பணி

தோக்கவாடி ஊராட்சியில் நீர்வள ஆதாரத் துறை சார்பில் ஏரியில் ஆக்கிரமித்து வளர்ந்திருந்த சீமைக் கருவேல மரங்களை அகற்றும் பணியையும் ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஏரியின் நீர்வரத்து மற்றும் நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீர்நிலைகளை முறையாக பராமரிக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பட்டா மனுக்கள் மீது நடவடிக்கை

குயிலம் குரூப் கிராம நிர்வாக அலுவலகத்திலும் ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார். பட்டா கோரி பொதுமக்கள் அளித்திருந்த மனுக்களின் நிலை குறித்து கேட்டறிந்து, தகுதியான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

தொடர்ந்து தகுதியான பயனாளிகளுக்கு பட்டா வழங்குவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

ஆய்வின் போது மாவட்ட சுகாதார அலுவலர் வெங்கட்ரமணன், இணை இயக்குநர் (கால்நடைத் துறை) கந்தசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) கிருஷ்ணன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மதுசெழியன், செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) சிவநாத், செங்கம் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தொலைதூர பேருந்துகளிலும் மகளிர் கட்டணமில்லாமல் செல்ல 'வெற்றி பயணம்' திட்டம் இன்று தொடக்கம்

## சென்னையில் முதல்வர் விஜய் தொடங்கி வைக்கிறார்

தொலைதூர பேருந்துகளிலும் மகளிர் கட்டணமில்லாமல் செல்லும் வகையில் வெற்றி பயணம் திட்டத்தை முதல்வர் விஜய் இன்று தொடங்கி வைக்கிறார்.

சமீபத்தில் நடந்த சட்டப்பேரவை கூட்டத்தொடரில் 110 விதியின் கீழ் முதல்வர் விஜய் வெளியிட்ட அறிவிப்பில் 'தமிழகத்தில் எந்தப் பகுதியிலும் வசிக்கும் ஒவ்வொரு மகளிரும் போக்குவரத்துக் கட்டணத்தால் தமது வாய்ப்புகளை இழக்கக்கூடாது என்ற சமூகநீதிச் சிந்தனையை தவெக அரசு முதன்மையாகக் கொண்டுள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு, மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தை விரிவுபடுத்தி, பெருமளவில் பயனளித்திடும் விதமாக, 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில், காந்தியடிகள் பிறந்த நாளில் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது' என கூறியிருந்தார்.

இந்நிலையில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு விரிவாக்கம் செய்யப்பட்ட மகளிர் கட்டணமில்லா வெற்றி பயணம் திட்டத்தை முதல்வர் விஜய் இன்று காலை 10 மணிக்கு கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து தொடங்கிவைக்க உள்ளார்.

இதன்மூலம், மாநகரம், நகரங்களில் சாதாரணப் பேருந்துகள் மட்டுமின்றி மாநகரம், நகர்ப்பகுதிகளில் இயங்கும் எக்ஸ்பிரஸ், எல்எஸ்எஸ், டீலக்ஸ் அரசுப் பேருந்துகளிலும், மகளிர் இலவசமாகப் பயணிக்கலாம்.

மேலும் கூடுதலாக, மாவட்டங்களுக்கிடையே பயணம் மேற்கொள்ள ஏதுவாக புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில், சாதாரணக் கட்டணப் பேருந்துகளிலும் இத்திட்டம் பொருந்தும்.



7 போக்குவரத்து கழகங்கள் மூலமாக இயக்கப்பட உள்ள 12,692 பேருந்துகளில் தினசரி 84.32 லட்சம் பெண்கள் மற்றும் திருநங்கைகள் பயன் பெறுவார்கள் என போக்குவரத்து துறை கூறியுள்ளது.

கதர் ஆடைகளை வாங்குவோம்

முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ''மகாத்மா காந்தி, அகிம்சை என்னும் ஆயுதத்தை ஏந்தியவர். ராட்டை என்னும் நூற்புச் சக்கரத்தின் மூலம் ஒவ்வொரு இந்தியனுக்கும் பொருளாதார சுதந்திரத்தையும், சுய சார்பையும் போதித்தார்.

ஒரு கதராடையை நாம் வாங்குவது,

ஒரு நெசவாளரின் கைத்திறனுக்கு அளிக்கும் அங்கீகாரம். ஒரு கைவினைப் பொருளை நாம் வாங்குவது, ஒரு கைவினைஞரின் உழைப்புக்கு அளிக்கும் மரியாதை.

பள்ளி, கல்லூரி மாணவர்கள், அரசு, தனியார் நிறுவன ஊழியர்கள், இளைஞர்கள் மற்றும் தமிழக மக்கள் அனைவரும் கதர் ஆடைகளையும், கைவினைப் பொருட்களையும் வாங்கி, நம் நூற்பாளர், நெசவாளர் மற்றும் கைவினைஞர்கள் வாழ்வில் புத்தொளி பாய்ச்ச வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

மற்றொரு பதிவில், ''அக். 2 காந்தி ஜெயந்தியன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் (செங்கல்பட்டு,

திருப்பூர் மாவட்டங்கள் நீங்கலாக) கிராமசபைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் பொதுமக்கள் திரளாகப் பங்கேற்க வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

# அசோலா வளர்ப்பில் அசத்தும் வாய்ப்பு! பசுந்தீவன உற்பத்தி மூலம் கால்நடைச் செலவை குறைக்க விவசாயிகளுக்கு பயிற்சி

## பிருதூரில் வேளாண்மைத் துறை சார்பில் சிறப்பு விவசாயிகள் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம் பிருதூரில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகள் சார்பில், VIT வேளாண் அறிவியல் கல்லூரியின் RAWE மாணவர்களின் பங்கேற்புடன் அசோலா வளர்ப்பு, பசுந்தீவன உற்பத்தி மற்றும் தோட்டக்கலைத் திட்டங்கள் குறித்த விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது.

பிருதூர் ராணி மஹாலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோட்டக்கலை உதவி இயக்குநர் S. பாலவித்யா, வேளாண்மை அலுவலர் V. சதீஷ்வரன், உதவி வேளாண்மை அலுவலர் C. ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு அரசின் பல்வேறு திட்டங்கள், மானியங்கள் மற்றும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளின் சார்பில் வழங்கப்படும் தொழில்நுட்ப ஆலோசனைகள் குறித்து விளக்கினர்.

அசோலா வளர்ப்பு குறித்து செய்முறை விளக்கம்

கூட்டத்தில் VIT வேளாண் அறிவியல் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் R. திருமலைக்குமார், பேராசிரியர் முனைவர் S. சரவணன், இணைப் பேராசிரியர் முனைவர் M.A. அரபி முகமது சாலேஹ் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

அவர்கள் அசோலா வளர்ப்பதற்கான முறைகள், அதன் ஊட்டச்சத்து மதிப்பு, கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தும் விதம், பசுந்தீவன உற்பத்தி மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், பண்ணை அளவிலேயே பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதன் மூலம் கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்தை தொடர்ந்து பெறுவதுடன், வெளியில் இருந்து தீவனம் வாங்குவதற்கான செலவையும் கணிசமாக குறைக்க முடியும் எனவும் விளக்கப்பட்டது.

அரசு மானியங்கள் குறித்து விழிப்புணர்வு

தோட்டக்கலைத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு அரசுத்திட்டங்கள், மானியங்கள் மற்றும் அவற்றைப் பெறுவதற்கான நடைமுறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் தங்களது சந்தேகங்களை அலுவலர்கள் மற்றும் வளவாளர்களிடம் கேட்டறிந்து, அசோலா வளர்ப்பு மற்றும் பசுந்தீவன உற்பத்தி தொடர்பான பல்வேறு தகவல்களைப் பெற்றனர்.





பள்ளி மாணவர்களுக்கு வேளாண் உயர் கல்வி விழிப்புணர்வு

RAWE திட்டத்தின் கீழ் VIT மாணவர்கள் நிவேதா I., தேஜாஸ்ரீ S.B., லயாஸ்ரீ S. மற்றும் ஹரிதாரிணி M. ஆகியோர் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்புப் பணிகளில் ஈடுபட்டதுடன், விவசாயிகளுடனான கலந்துரையாடலிலும் பங்கேற்றனர். தொடர்ந்து, அரசுப் பள்ளியைச்சேர்ந்த NSS மாணவர்களுடன் VIT RAWE மாணவர்கள் கலந்துரையாடினர். அப்போது வேளாண் அறிவியல் பட்டப்படிப்பின் நான்கு ஆண்டு பாடத்திட்டம், முக்கியப் பாடங்கள், நடைமுறைப் பயிற்சிகள் மற்றும் வேளாண்மைத் துறையில் உள்ள கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. இதன்மூலம் வேளாண் உயர்கல்வியைத் தேர்வு செய்வதற்கான வாய்ப்புகள் மற்றும் வேளாண்மை சார்ந்த எதிர்கால தொழில் வாய்ப்புகள் குறித்து பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அசோலா வளர்ப்பு, பசுந்தீவன உற்பத்தி, கால்நடை ஊட்டச்சத்து, அரசு மானியத் திட்டங்கள் மற்றும் வேளாண் உயர்கல்வி வாய்ப்புகள் என விவசாயிகளுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் ஒருங்கிணைந்த விழிப்புணர்வை ஏற்படுத்திய இக்கூட்டம் பயனுள்ளதாக அமைந்தது.



தமிழக அரசின் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு அனைத்து தமிழக தலைவர்கள் தாராபுரம் சட்டமன்றத்துக்கு உட்பட்ட பகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்றனர் அப்பிரச்சதின் ஒரு பகுதியான தாராபுரம் சட்டமன்றத்துக்கு உட்பட்ட மூலனூர் பகுதியில் அண்ணா திராவிட முன்னேற்ற கழக வேட்பாளரை ஆதரித்து பழனி சட்டமன்ற உறுப்பினர் கே ரவி மனோகரன் அவர்கள் மூலனூர் பகுதியில் பிரச்சாரம் செய்தனர் அப்பொழுது அண்ணா திராவிட முன்னேற்ற கழக பொறுப்பாளர்கள் சார்பு அணி செயலாளர் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு தாராபுரம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளருக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்குகள் வீடு வீடாக சென்று தங்கள் வாக்குகளை இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்கும் படி பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டனர்

# வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டதா? அக்டோபர் 5 முதல் 9 வரை சிறப்பு முகாம்;தகுதியானவர்கள் உடனடியாக பெயரை சேர்க்கலாம்

## மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற சிறப்புத் தீவிரத் திருத்தப் பணியின்போது வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள், தற்போது தகுதி பெற்றுள்ள புதிய வாக்காளர்கள் மற்றும் முதல் முறையாக வாக்காளர் பட்டியலில் இடம்பெற தகுதி பெற்றவர்கள் தங்களது பெயர்களை சேர்த்துக் கொள்ள சிறப்பு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் தொடர்திருத்தப் பணியின் மூலம், தகுதி இருந்தும்வாக்காளர்பட்டியலில் பெயர் இடம்பெறாமல் உள்ளவர்கள் தங்களது பெயர்களை சேர்த்துக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

அக்.5 முதல் 9 வரை சிறப்பு முகாம்

இதற்காக திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களிலும் 05.10.2026 முதல் 09.10.2026 வரை சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. தினமும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் இம்முகாமில் தகுதியானவர்கள் நேரில் சென்று வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான படிவங்களை சமர்ப்பிக்கலாம்.

வாக்காளர் பட்டியலில் புதியதாக பெயர் சேர்ப்பதற்கு படிவம் 6 பயன்படுத்தப்படுகிறது. தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் சேவை இணையதளத்திலும் புதிய வாக்காளர் பதிவு செய்வதற்கான Form 6 வசதி தற்போது வழங்கப்பட்டுள்ளது.

நேரிலும், ஆன்லைனிலும் பதிவு செய்யலாம் தகுதி வாய்ந்த வாக்காளர்கள் சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை நேரில் சமர்ப்பிக்கலாம். மேலும், தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் சேவை இணையதளம் மற்றும் ECI NET செயலி மூலமாகவும் பெயர் சேர்ப்பதற்கான விண்ணப்பத்தை மேற்கொள்ளலாம்.

வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் இடம் பெற்றுள்ளதா என்பதையும் தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ சேவைகள் மூலம் சரிபார்த்துக் கொள்ளலாம். வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருப்பது வாக்களிப்பதற்கான அடிப்படைத் தேவையாகும். எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள் மற்றும் முதல் முறையாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க தகுதி பெற்றவர்கள், இந்த சிறப்பு வாய்ப்பை பயன்படுத்தி உரிய காலத்திற்குள் தங்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.



# களம்பூர் பேரூராட்சியில் அரசின் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு புகைப்பட கண்காட்சி

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம், களம்பூர் தேர்வுநிலை பேரூராட்சி, ஆஞ்சநேயர் கோயில் அருகில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர் ஏற்படுத்தும் வகையில் புகைப்பட கண்காட்சி நடத்தப்பட்டது. மேலும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன வீடியோ வாகனம் வாயிலாக களம்பூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைக்கப்பட்ட திட்டங்கள் குறித்தும், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம், தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம், வெற்றி பயணம் திட்டம் மற்றும் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு குறும்படங்கள் ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்வுகளை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து பயன்பெற்றனர். இந்நிகழ்ச்சிகளை களம்பூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மலர் மாறன் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## செய்யாறில் நகராட்சி சார்பில்

# பஸ் நிலையம் பகுதியில் குப்பைத் தரம் பிரித்தல் பொது இடத்தில் மலம் கழிப்பதை தவிர்த்தல் மரக்கன்றுகள் நடுதல் சுவர் விளம்பரம் மூலம் விழிப்புணர்வு ஏற்பாடு

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் நகராட்சி சார்பில் பஸ் நிலையம் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2026ன் கீழ் பொதுமக்கள், வியாபார பெருமக்கள் தங்களிடம் தினசரி உருவாகும் குப்பைகளை ஈர கழிவுகள், உலர் கழிவுகள்,




சுகாதார கழிவுகள் மற்றும் சிறப்பு கழிவுகள் என 4 வகைகளாக பிரித்து வழங்குவதல், நகர பசுமையாக்கல் திட்டத்தின்படி மரக்கன்றுகள் நடுதல், பொதுமக்கள் திறந்த வெளியில் மலம் கழிப்பதை தவிர்த்து கழிப்பறைகளை பயன்படுத்துதல் குறித்தும், வெறி நாய் தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு மற்றும் நகரை அழகுபடுத்துதலை பொதுமக்கள் அறியும் நோக்கத்தில் நகராட்சி மூலம் பஸ் நிலைய உட்புற சுற்றுச் சுவரில் சுவர் விளம்பரம் எழுதப்பட்டு அதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது வண்ணமயமான விழிப்புணர்வு படத்தினை பொதுமக்களும் வியாபாரிகளும் மாணவ மாணவிகளும் ஆர்வமாக பார்த்து அதன் படி நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு செல்கின்றனர்.

## "தாராபுரம் இடைத்தேர்தல்" தவெக வெற்றி வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து

# மக்கள் செல்வாக்குமிக்க கம்பம் எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா பைக் மூலம் தீவிர வீதி பிரச்சாரம்

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தமிழக வெற்றிக்கழக கூட்டணி சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் சத்தியபாமா அமோக வெற்றி பெறுவார் என்று கம்பம் சட்டமன்ற உறுப்பினரும், தேனி தென் மேற்கு மாவட்ட கழக செயலாளருமான ஜெகநாத் மிஸ்ரா தெரிவித்தார். தங்களது சொந்த தொகுதி பெற்று வருகிறார். அந்த வகையில், தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிடும் தவெக வெற்றி வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து, கம்பம் எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா நேற்றைய தினம் தாராபுரம் 20 மற்றும் 21 வது வார்டுகளுக்கு உட்பட்ட மார்க்கெட் தெரு, உழவர் சந்தை உள்ளிட்ட பகுதிகளில் கட்சி நிர்வாகி வளர்த்தெடுத்தனர். ஆனால், இன்றைக்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி திமுகவுடன் கூட்டணி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டதை உண்மை தொண்டர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதனால் அதிருப்தியடைந்த பலரும் அதிமுகவில் இருந்து விலகி, தமிழகவெற்றிக்கழகதலைவர்




யோடு மட்டும் நின்றுவிடாமல், கழகத்தின் வளர்ச்சிக்காகவும் பொதுமக்கள் நலனுக்காகவும் தமிழகத்தின் எந்த ஒரு பகுதியாக இருந்தாலும் பாகுபாடின்றி களத்தில் இறங்கி செயல்படும் மக்கள் நல போராளியாக திகழும் கம்பம் எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா, தற்போது தாராபுரம் இடைத்தேர்தல் களத்திலும் தனது தீவிர பிரச்சாரத்தால் பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் பிரபலத்தையும் கள் மற்றும் தொண்டர்களுடன் எளிமையாக மோட்டார் சைக்கிளில் சென்று, வீதி வீதியாக சென்று தீவிர பிரசாரம் மேற்கொண்டு 'விசில்' சின்னத்திற்கு அமோக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். பிரச்சாரத்தின்போது அவர் பேசியதாவது, "அதிமுகவை நிறுவிய எம்.ஜி.ஆர். மற்றும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆகியோர் திமுகவை தீய சக்தி என்று அடையாளங் காட்டி அதிமுகவை C.ஜோசப் விஜய் தலைமையில் இணைந்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாகவே, தாராபுரத்தில் வெற்றி பெற்ற சத்தியபாமாவும் தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தார். எனவே, தாராபுரம் தொகுதி வாக்காளர்கள் அனைவரும் விசில் சின்னத்தில் வாக்களித்து சத்தியபாமாவை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

# செய்யாறில் அக்.10ல் பிரமாண்ட தனியார் வேலைவாய்ப்பு முகாம்; 150க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் பங்கேற்பு -

## 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியிடங்களுக்கு இளைஞர்கள் தேர்வு

திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் வரும் அக்.10ம் தேதி (சனிக்கிழமை) செய்யாறில் நடைபெற உள்ளது.

செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும் இந்த முகாமில், 150க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள் பங்கேற்று, 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணிக்காலியிடங்களுக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்ய உள்ளனர்.

பல்வேறு கல்வித் தகுதிகளுக்கு வாய்ப்பு

இந்த முகாமில் 8ம் வகுப்பு, 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு, பட்டப்படிப்பு, முதுநிலைப் பட்டப்படிப்பு, ஐ.டி.ஐ., பாலிடெக்னிக், நர்சிங், பார்மசி மற்றும் பொறியியல் உள்ளிட்ட பல்வேறு கல்வித் தகுதிகளை பெற்ற வேலைநாடுநர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

இதன்மூலம்தங்களதுகல்வித்தகுதிக்கும்திறமைக்கும் ஏற்ற வேலைவாய்ப்புகளை நேரடியாக தனியார் நிறுவனங்களிடம் பெறுவதற்கான வாய்ப்பு வேலைநாடுநர்களுக்கு கிடைக்க உள்ளது.

ஒரே இடத்தில் பல்வேறு சேவைகள்

வேலைவாய்ப்பு வழங்குவதுடன், மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு வாய்ப்புகள், திறன்மேம்பாட்டு பதிவு, தொழிற்பழகுநர் பயிற்சி பதிவு உள்ளிட்ட சேவைகளும் முகாமில் வழங்கப்பட உள்ளன.

மேலும், மாவட்ட தொழில் மையம் மற்றும் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு கடன்திட்டங்கள் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்பட உள்ளதால், வேலை தேடும் இளைஞர்களுடன் தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்களும் முகாமை பயன்படுத்திக் கொள்ளலாம்.

என்னென்ன ஆவணங்கள் கொண்டு வர வேண்டும்?

முகாமில் பங்கேற்க விரும்பும் வேலைநாடுநர்கள் 4 பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள், ஆதார் அட்டை, குடும்ப அட்டை, சாதிச்சான்று மற்றும் கல்வித் தகுதி சான்றிதழ்களின் நகல்கள் ஆகியவற்றை தவறாமல் கொண்டு வர வேண்டும்.

முகாமில் பங்கேற்க விரும்புவோர் www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04175 233381 என்ற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், பல்வேறு கல்வித் தகுதி பெற்ற வேலைநாடுநர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இந்த மாபெரும் வேலைவாய்ப்பு முகாமில் அதிக அளவில் கலந்து கொண்டு, தங்களுக்கான வேலை வாய்ப்புகளைப் பெற்றுப் பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.



## செங்கம் மேற்கு ஒன்றியத்தில் களைகட்டிய பிரதமர் மோடி பிறந்தநாள் சேவை விழா:

# மாணவர்களின் திறமையை வெளிக்கொணர்ந்த போட்டிகள்; வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள், மரக்கன்றுகள் வழங்கல்

பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு நாடு முழுவதும் நடைபெற்று வரும் சேவை மாத விழாவின் ஒரு பகுதியாக, திருவண்ணாமலை தெற்கு மாவட்டம், செங்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செங்கம் மேற்கு ஒன்றியம், மேலவணக்கம்பாடி கிராமத்தில் பாஜக சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

ஒன்றியத் தலைவர் இளங்கோ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மாணவர்களின் தனித்திறன்களை வெளிக்கொண்டு வரும் வகையில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி, கோலப்போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

குறிப்பாக, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், அத்திட்டங்களின் கருத்துகளை பிரதிபலிக்கும் வகையில் கோலங்கள் வரையும் போட்டி நடைபெற்றது. வண்ணமயமான கோலங்கள் மூலம் மத்திய அரசின் திட்டங்களை விளக்கியது பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது.

மேலும், மாணவர்களிடையே போட்டி உணர்வையும், தன்னம்பிக்கையையும் வளர்க்கும் வகையில் நடைபெற்ற போட்டிகளில் ஏராளமான மாணவர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றனர். இதனால் மேலவணக்கம்பாடி கிராமமே விழாக்கோலம் பூண்டது.

பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருவண்ணாமலை தெற்கு மாவட்ட பாஜக தலைவர் K. ரமேஷ் பரிசுப் பொருட்கள் மற்றும் மரக்கன்றுகளை வழங்கி பாராட்டினார். மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலும் மரக்கன்றுகள்வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர் ஜெய்நாத், மண்டல் பொருளாளர் தமணிகண்டன், பட்டியலணி மாவட்ட துணைத் தலைவர் குபேந்திரன், முன்னாள் மண்டல் பொதுச் செயலாளர் வேல்முருகன் மற்றும் பாஜக நிர்வாகிகள், தொண்டர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் திறமையை ஊக்குவித்தல், மத்திய அரசின் மக்கள் நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்துதல் என பல்வேறு நோக்கங்களை ஒருங்கிணைத்து நடைபெற்ற இச்சேவை மாத விழா, செங்கம் மேற்கு ஒன்றியத்தில் பாஜகவினரிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது.

# திண்டுக்கல் அம்பிளிக்கையில் கொலை முயற்சி வழக்கு - 3 பேர் கைது

திண்டுக்கல் மாவட்டம், அம்பிளிக்கை காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட தங்கச்சியம்மாபட்டியில் உள்ள பேக்கரியில் பணிபுரியும் பாலாஜி (24) என்பவரை, முன்பகை காரணமாக பட்டாக்கத்தியுடன் வந்த நவீன்குமார் (19), நாகராஜ் (19), ராஜ்குமார் (18) ஆகிய 3 பேர் தாக்கிவிட்டு தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது.

காயமடைந்த பாலாஜி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்த புகாரின் பேரில் அம்பிளிக்கை காவல் நிலைய போலீசார் கொலை முயற்சி வழக்குப்பதிவு செய்தனர்.



தொடர்ந்து போலீசார் மேற்கொண்ட விசாரணையில், சம்பவத்தில் தொடர்புடைய 3 பேரையும் உடனடியாக கைது செய்தனர். மேலும், குற்றச் சம்பவத்திற்கு பயன்படுத்திய 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றக் காவலுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே பயிர் கடன் தள்ளுபடியில் ரூ.4 கோடி வரை முறைகேடு செய்த முன்னாள் கூட்டுறவு கடன் சங்க செயலாளர் சண்முகவேலுவை பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் கைது செய்தனர் போலி குத்தகை பத்திரங்கள் போலி கையெழுத்துகளை பயன்படுத்தி கடன் வழங்கி முறைகேடு செய்தது தெரியவந்தது**



திண்டுக்கல் மாவட்டம் பழனியில் காந்தி ரோட்டில் உள்ள மார்க்கெட் எதிர்ப்புறம் ஒரு ஜவுளி கடையில் நீதிமன்ற உத்தரவும்படி ஜவுளி கடைக்கு சீல்வைத்துஜப்திநடவடிக்கை01.10.2026சக்திநடவடிக்கைஎடுக்கப்பட்டது இதனால் சிறிது நேரம் காந்தி மார்க்கெட் எதிர்ப்புறம் பரபரப்பு ஏற்பட்டது

# இராணிப்பேட்டை மாவட்ட நூலகத்தில் மாணவர்களுக்கு இலவச திரைப்படக் காட்சி;மாவட்ட ஆட்சியர் ப்ரியா நேரில் பார்வையிட்டு ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ப்ரியா ரவிச்சந்திரன், இராணிப்பேட்டை நகராட்சி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட நூலகத்தில் அரசு பள்ளிகளில் 100% வருகை புரிந்த மாணாக்கர்களையும், வகுப்பறை தேர்வுகளில் நல்ல முன்னேற்றம் அடையும் மாணாக்கர்களையும் அங்கீகரித்து தொடர்ந்து கற்றலை மகிழ்வானதாக மாற்றும் வகையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக் கல்வித்துறை இணைந்து 250 மாணவர்களுக்கு காலாண்டு தேர்வு விடுமுறை நாளில் இலவச மாகஃபைண்டிங்நீமோ, ஜுராசிக் பார்க், தி வெல்டு ரோபோ ஆகிய குழந்தைகளுக்கான திரைப்படம் காண்பிக்கப்படுவதை பார்வையிட்டு மாணவ மாணவியர்களுடன் கலந்துரையாடினார். இதனை தொடர்ந்து மாவட்ட நூலகத்தில் தேர்வர்கள் TNPSC தொகுதி II/IIA மாதிரித் தேர்வு எழுதுவதை பார்வையிட்டார்கள். உடன் உடன் முதன்மை கல்வி அலுவலர் மோகனா, மாவட்ட கல்வி அலுவலர்கள் சிவராமன் தொடக்க நிலை துரைவேல் இடை நிலை மாவட்ட நூலகர் சக்திவேல்,நூலக அலுவலர் அப்துல் ரஷீத் மற்றும் பலர் உள்ளனர்.



# "சின்னமனூர் நியாயவிலை கடைகளில் 'பாயிண்ட் ஆஃப் சேல்' கருவி கோளாறு" வட்ட வழங்கல் அதிகாரி உடனடியாக ஆய்வு செய்ய சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

தேனி மாவட்டம் சின்னமனூர் பகுதியில் இயங்கி வரும் ரேஷன் கடைகளில் குடும்ப அட்டை பதிவுக்கான 'பாயிண்ட் ஆஃப் சேல்' (Point of Sale) கருவி



கள் அடிக்கடி இயந்திர கோளாறால் முடங்கி வருவதாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். ரேஷன் கடைகளில் மாதம்தோறும் 1 ஆம் தேதி முதல் தொடர்ந்து ஒரு வாரத்திற்கு மேலாக இத்தகைய தொழல்நுட்ப கோளாறுகள் ஏற்படுகின்றன. இதனால் உணவுப் பொருட்கள் பெற வரும் பொதுமக்கள் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய சூழல் நிலவுகிறது. கூலி வேலைக்கு செல்லும் சாமானிய மக்கள், தங்களின் ஒரு நாள் கூலியை இழந்து ரேஷன் பொருட்களை பெற அலைக்கழிக்கப்படுகின்றனர். ஒரு குடும்ப அட்டைக்கு பதிவு செய்யவே சுமார் 15 நிமிடங்களுக்கு மேல் ஆவதால், ஒரு நாளில் 50 அட்டைகளுக்கு மேல் பொருட்களை விநியோகிக்க முடியாமல் ஊழியர்களும் கடும் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். மேலும், கைரேகை சரிபார்ப்பு (eKYC) போன்ற பணிகளினாலும் கடும் தாமதம் ஏற்படுகிறது. இது குறித்து துறை சார்ந்த அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தால், அவர்கள் உரிய பதில் அளிக்காமல் புறக்கணிப்பதாக கூறப்படுகிறது. தற்போது ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை மற்றும் தீபாவளி போன்ற தொடர் பண்டிகை காலம் வரவுள்ள நிலையில், ரேஷன் விநியோகம் மேலும் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் மற்றும் நுகர்வோரின் நலனை கருத்தில் கொண்டு, மாவட்ட வழங்கல் அதிகாரி (DSO) மற்றும் வட்ட வழங்கல் அதிகாரி (TSO) ஆகியோர் உடனடியாக சின்னமன்னூர் பகுதியில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் நேரடி ஆய்வு மேற்கொண்டு, பழுது அடைந்த கருவிகளை மாற்றித் தரவும், பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சியில் வளர்ச்சித்திட்டப் பணிகள்; மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சியில் இன்று (01.10.2026) வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த அவர்கள், ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் வீரபாண்டி பேரூராட்சியில் உள்ள அங்கன்வாடி



மையத்திற்கு சென்று உணவுப்பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டு, அங்கு பராமரிக்கப்படும் பதிவேடுகளைப் பார்வையிட்டதுடன், குழந்தைகள் கல்வித்திறன் குறித்துக் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, வீரபாண்டி கூட்டுறவுத் தொடக்க வேளாண் கடன் சங்க அலுவலகத்திற்கு சென்று அங்கு செயல்பட்டுவரும் இசேவை மையத்தை பார்வையிட்டு ஒவ்வொரு நாளும் பொதுமக்களின் தேவைக்கான சான்றுகள் பெறப்படும் விவரம் குறித்து கேட்டறிந்ததுடன், பொதுமக்களின் தேவைக்கேற்ப சிறப்பாக செயல்படவும் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, கூட்டுறவு வங்கியில் நடப்பாண்டில் விவசாயிகளும் வழங்கப்பட்ட விவசாயக்கடன் மற்றும் கடந்த ஆண்டு விவசாயிக்கடன்விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்ததன் விவரம் குறித்தப் பதிவேடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், வங்கியின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து விவசாயிகளுக்கு உரிய மானியத்திட்டங்களை உரிய காலத்தில் வழங்கிடவும் அறிவுறுத்தினார்.

சென்று மேலும், அவ்வளாகத்தில் உள்ள நியாயவிலைக்கடைக்குச் பொருட்களின் இருப்பு குறித்த பதிவேடுகளை பார்வையிட்டதுடன். குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் பொருட்கள் தடையின்றி வழங்குவதை பணியாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். பின்னர். தேனியில் உள்ள சமூகநீதி மாணவர் விடுதிக்குச் சென்று பார்வையிட்டு, அட்டவணைப்படி இன்று மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டதா என கேட்டறிந்ததுடன், உணவின் தன்மைக்குறித்து பார்வையிட்டு, விடுதியை தூய்மையாக வைத்துக்கொள்ள பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து, இராணுவ வீரர்களுக்கா ன பல்பொருள் அங்காடி வளாகத்திற்கு சென்று, அங்கு விற்பனைசெய்யப்படும் உணவுப்பொருள் உள்ளிட்ட அத்தியாவசியப்பொருட்களை பார்வையிட்டதுடன்படைவீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் குடும்ப உறுப்பினர்களின் தேவைக்கேற்ப இருப்பு வைத்து விற்பனை செய்திட வேண்டும் என அலுவலருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அ அறிவுறுத்தினார்.



# திண்டுக்கல்லில் அரசுப் பேருந்து கண்ணாடியை உடைத்த நபர் கைது

திண்டுக்கல் நாகல்நகர் தினத்தந்தி ரவுண்டானா அருகே இன்று (01.10.2026) காலை குடிபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய மாரிமுத்து (35), சாலையோரம் கிடந்த சிமெண்ட் கல்லை எடுத்து அவ்வழியாகசென்றஅரசுப்பேருந்தின்மீதுவீசியுள்ளார்.

இதில் பேருந்தின் முன்பக்கக் கண்ணாடி உடைந்து சேதமடைந்தது. பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.பேருந்து ஓட்டுநர் செல்வராஜ் அளித்த புகாரின் பேரில் நகர் தெற்கு காவல் நிலைய போலீசார் வழக்குப் பதிவு செய்து, சம்பவம் நடந்த சில மணி நேரங்களிலேயே மாரிமுத்துவை கைது செய்தனர்.

அவரை நீதிமன்றக் காவலுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் இடையூறு விளைவிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S. ஜெயக்குமார், இ.கா.ப., எச்சரிக்கை விடுத்துள்ளார்




இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியாரவிச்சந்திரன்,இ.ஆ.ப.மேல்விஷாரம் MMES மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்பாடு அலுவலகம் சார்பில் பெண்களுக்கான சுயதொழில் மற்றும் தொழில்முனைவோருக்கான பாதைகளை உருவாக்குதல் திட்டத்தின் கீழ் தொழில்முனைவோர் விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து உரையாற்றினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பெ.சிபின் இ.கா.ப., துணை இயக்குநர். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்பாடு மற்றும் வசதி அலுவலகம் திருமதி.ரேஷ்மா ராஜீவன். I.E.S., கல்லூரி முதல்வர் முனைவர்.ப்ரெடா ஞானசெல்வம். கல்லூரி உள்தர உறுதிப் பிரிவு (IQAC) இயக்குநர் திருமதி.சசிரேகா. கல்லூரி உள்வளர்ப்பு மற்றும் கண்டுபிடிப்பு அமைப்பின் முதன்மை செயல் அலுவலர் திரு. இர்ஷாத் அஹமது மற்றும் பலர் உள்ளனர்.

# திண்டுக்கல் மாவட்டம் பழனி பழனி ஆண்டவர் மகளிர் கல்லூரி சார்பாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணி




திண்டுக்கல் மாவட்டம் பழனி பழனி ஆண்டவர் மகளிர் கல்லூரி சார்பாக சின்ன கலயமுத்தூரில் மகளிர் கலைக் கல்லூரி உயிர் தேவை காப்புறுதி மையத்தின் (IQAC) சார்பில் சுற்றுச்சூழல் (EVS) செயல்பாட்டின் ஒரு பகுதியாக 01.10.2026(வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது மரம் நடுதல் அவசியம் நெகிழி ஒழிப்பு விழிப்புணர்வு நீர் வளங்களை பாதுகாத்தல் சுற்றுச்சூழல் மாசு கட்டுப்பாட்டு தவிர்த்தல் ஆகிய நோக்கத்துடன் இப்ப பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது மாணவியர் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்து பதாகைகளே ஏந்தி விழிப்புணர்வு வாசகங்களை கூறியும் வி கே மில்ஸ் விஜயாபுரம் பகுதி மக்களுக்கு சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தினர் கல்லூரி வாசலில் தொடங்கிய இப்பேரணி விகே மில் விஜயாபுரம் பகுதி வழியாக மீண்டும் கல்லூரி வாசலில் வந்து அடைந்து இப்ப பேரணிக்கு பழனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களின் மேற்பார்வையில் நெய்க்காரப்பட்டி காவல்துறையினர் பாதுகாப்பு அளித்து இப்ப பேரணியை கல்லூரி முதல்வர் முனைவர் நா புவனேஸ்வரி அவர்கள் கொடியேசத்து தொடங்கிவைத்தனர்பேரணியில் 110 பேராசிரியர்கள் 1435 மாணவியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்

# பழனி அருகே 100 கிராம் கஞ்சா பறிமுதல் - ஒருவர் கைது; தனிப்படை போலீசார் அதிரடி நடவடிக்கை

திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். ஜெயக்குமார் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், பழனி துணைக் காவல் கண்காணிப்பாளர் தேவராஜ் அவர்களின் உத்தரவின்படியும், பழனி தாலுகா காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, கஞ்சா மற்றும் புகையிலைப் பொருட்களின் விற்பனையைத் தடுக்கும் வகையில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக, பழனிதாலுகாகாவல் ஆய்வாளர் சத்தியமூர்த்தி தலைமையிலான தனிப்படை போலீசார் வாகனச் சோதனை மற்றும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, பெத்தநாயக்கன்பட்டியைச் சேர்ந்த அழகர் மகன் பெரியசாமி என்பவரிடம் இருந்து சுமார் 100 கிராம்



கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இதையடுத்து பெரியசாமியை கைது செய்த போலீசார், அவரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவை கைப்பற்றி, வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

பின்னர் நீதிமன்ற உத்தரவின்படி அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த நடவடிக்கையில் பழனி தாலுகா காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அருள் சாமி மற்றும் காவலர் வேலுமணி உள்ளிட்ட தனிப்படை போலீசார் ஈடுபட்டனர். தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களின் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுவோர் மீது தொடர்ந்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் தெரிவித்துள்ளனர்.

# "முறையற்ற தொழிலால் வர்த்தக நிறுவனங்கள்,பெண் பக்தர்கள் கடுமையான பாதிப்பு" காவல்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க கோரிக்கை

தேனி மாவட்டம சின்னமனூர் நகராட்சிக்கு உட்பட்ட எள்ளுக்கட்டை பாதையில் சமீபகாலமாக அதிகரித்து வரும் முறையற்ற தொழில்களால், அப்பகுதியில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் கடுமையான பாதிப்பை சந்தித்து வருவதோடு, கோயிலுக்கு செல்லும் பெண் பக்தர்களும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். முன்பு சின்னமனூரி லிருந்து மார்க்கையன் கோட்டை சாலை வழியாக சுற்றிச் சென்று சிவகாமி அம்மன் கோவிலை அடைய வேண்டிய சூழல் இருந்தது. இந்த அலைச்சலை குறைக்கும் பொருட்டும், பொதுமக்கள் மற்றும் பெண் பக்தர்கள் மிக எளிதாகவும் விரைவாகவும் கோவிலை சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்திலும் உருவாக்கப்பட்டது தான் இந்த எள்ளுக்கட்டை பாதை. இந்த புதிய நெடுஞ்சாலை இணைப்பு பாதை அமைக்கப்பட்டதை தொடர்ந்து, நகருக்குள் வாழும் மக்களுக்கு இது மிக முக்கியமான வழித்தடமாக மாறியது. காலப்போக்கில் இப்பாதையின் முக்கியத்துவம் கருதி மரக்கடைகள், பெயிண்ட் கடைகள், இரும்பு கடைகள் மற்றும் மனமகிழ் மன்றம் உள்ளிட்ட பல்வேறு வர்த்தக நிறுவனங்கள் புதிதாக தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதன் காரணமாக நாள்தோறும் ஏராளமான ஆண்களும் பெண்களும் தொழில் நிமித்தமாகவும், பொருட்கள் வாங்குவதற்காகவும் இப்பாதையை நாடி வருகின்றனர். முன்பு இப்பகுதியில் கடைகளோ அல்லது பொதுமக்கள் நடமாட்டமோ பெரியளவில் இல்லாத காலகட்டத்தில் பெரிய பாதிப்புகள் தெரியவில்லை. ஆனால், தற்போது வணிக நிறுவனங்களும் பக்தர்களின் நடமாட்டமும் கணிசமாக அதிகரித்துள்ள நிலையில், அப்பாதையின் நுழைவாயிலிலேயே சிலர் முறையற்ற தொழில்களில் ஈடுபட்டு வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்களும்,அவ்வழியாக செல்லும் பெண் பக்தர்களும் முகம் சுளிக்கும் வகையிலான அசௌகரியமான சூழல் அப்பகுதியில் நிலவுகிறது.

எனவே, பொதுமக்களும் பெண் பக்தர்களும் எவ்வித அச்சமுமின்றி வந்து செல்லும் வகையில் பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டும் என்றும், வர்த்தக நிறுவனங்களின் வாழ்வாதாரமும் தொழில்களும் பாதிக்காத வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பகுதி கடை உரிமையாளர்கள், பக்தர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, காவல்துறையினர் உடனடியாக தலையிட்டு அப்பகுதியில் நடக்கும் முறையற்ற செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இராணிப்பேட்டைமாவட்ட நலவாழ்வு சங்கம் தேசிய நலவாழ்வு குழுமம் (NHMTN) சார்பில் அறிவிக்கப்பட்ட செவிலியர் (Staff Nurse) பணியிடங்களுக்காக பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்ப விவரங்களை கீழ் கண்ட இணையதளங்களில் சரி பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:




இராணிப்பேட்டைமாவட்ட நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.ranipet.nic.in பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத் துறை இணையதளம்:

https://www.tndphpm.com/

விண்ணப்பத்தில் ஏதேனும் குறைபாடுகள் அல்லது ஆவணக் குறைபாடுகள் இருப்பின், அதற்கான உரிய ஆவணங்களை 03.10.2026க்குள் மாவட்ட ஆட்சியரகம், 3 தளம், B பிளாக், மாவட்ட சுகாதார அலுவலகத்தில் சமர்ப்பித்து குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு மாவட்ட சுகாதார அலுவலக தொலைபேசி எண்ணிற்கு 04172295179 தொடர்பு கொள்ளமாறு தெரிவிக்கப்படுகிறது. தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு 05.10.2026 அன்று பணியாணை வழங்கப்படுகிறது 61601 மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந. ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும் தேனி மாவட்ட காவல்துறையினர்

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. K. S. பிரவீன் கௌதம்,இ.கா.ப., அவர்களின் உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம்




மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# வரி செலுத்தவில்லை என்றால் உயிருக்கும் மதிப்பு இல்லையா?” - கே.ஜி.எஃப் நகர சபை மீது மோகன் கிருஷ்ணா கடும் கண்டனம்

## அஸ்வத் லேஅவுட்டில் தொடரும் அவலம் - சாலை வசதி இல்லாமல் மக்கள் தவிப்பு

கே.ஜி.எஃப்: நகரசபை நிர்வாகத்தின் அலட்சியத்தால் அஸ்வத் லேஅவுட் பகுதி மக்கள் தொடர்ந்து அவதிக்குள்ளாகி வருவதாக, ஆர்.கே. பவுண்டேஷன் தலைவர் மோகன் கிருஷ்ணா கடும் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்து பெய்து வரும் மழையால் அஸ்வத் லேஅவுட் பகுதியில் உள்ள சாலைகள் சேறும் சகதியுமாக மாறியுள்ளன. பல இடங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால், பொதுமக்கள் சாலையில் நடந்து செல்வதற்கும், இருசக்கர வாகனங்களில் செல்லவும் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

குறிப்பாக, குழந்தைகள், பள்ளி மாணவர்கள், பெண்கள், முதியவர்கள் மற்றும் வேலைக்குச் செல்லும் பொதுமக்கள் தினந்தோறும் இந்த சாலையை பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். மழை பெய்யும் ஒவ்வொரு முறையும் இதே நிலை தொடர்வதாக அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

சாலை வசதி என்பது பொதுமக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றாகும். ஆனால் பல ஆண்டுகளாக இந்த பகுதியில் சாலை மற்றும் வடிகால் பிரச்சனை நீடித்து வருவதாகவும், இதுகுறித்து பலமுறை அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் நிரந்தர தீர்வு ஏற்படுத்தப்படவில்லை என்றும் மோகன் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே உயிரிழப்பு... கை முறிவு ஏற்பட்ட சம்பவம்

அஸ்வத் லேஅவுட் பகுதியில் சாலை வசதி சரியாக இல்லாததால் ஏற்கனவே ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், மற்றொருவருக்கு கை முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் மோகன் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவங்களை சுட்டிக்காட்டிய அவர், பொதுமக்களின் பாதுகாப்பு குறித்து அதிகாரிகள் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

“இது என்னுடைய தனிப்பட்ட பிரச்சனை கிடையாது. அஸ்வத் லேஅவுட்டில் வசிக்கும் பொதுமக்களின் பிரச்சனை. இன்று ஒருவருக்கு ஏற்பட்ட பிரச்சனை நாளை வேறு ஒருவருக்கும் ஏற்படலாம். எனவே, அதிகாரிகள் இதை ஒரு தனிநபரின் கோரிக்கையாக பார்க்காமல், பொதுமக்களின் அடிப்படை பிரச்சனையாக பார்க்க வேண்டும்” என மோகன் கிருஷ்ணா தெரிவித்துள்ளார். மழைக்காலங்களில் சாலை நிலைமை மேலும் மோசமடைவதால், அவசர காலங்களில் ஆம்புலன்ஸ் உள்ளிட்ட வாகனங்கள் கூட சிரமமின்றி செல்லக்கூடிய வகையில் சாலைகளை சீரமைக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். பலமுறை போராட்டம்... அதிகாரிகளிடம் புகார்

அஸ்வத் லேஅவுட் சாலை பிரச்சனை குறித்து ஏற்கனவே பலமுறை போராட்டம் நடத்தி, நகர சபை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாக மோகன் கிருஷ்ணா கூறியுள்ளார். பொதுமக்களின் பிரச்சனைகளை நேரடியாக அதிகாரிகளிடம் எடுத்துச் சென்ற போதிலும், எதிர்பார்த்த அளவில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில், தற்போது நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதாகவும், உடனடியாக அதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு செய்து, தற்காலிகமாக சாலையை பயன்படுத்தக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் நிரந்தரமாக சாலை அமைத்தல், மழைநீர் செல்லும் வகையில் வடிகால் வசதி ஏற்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மோகன் கிருஷ்ணா வலியுறுத்தியுள்ளார்.

“கமிஷனரை தொடர்பு கொள்ள முயன்றும் அழைப்பு எடுக்கவில்லை”

மேலும், இந்த பிரச்சனை தொடர்பாக கே.



ஜி.எஃப் நகர சபை கமிஷனரை தொலைபேசி மூலம் பலமுறை தொடர்பு கொள்ள முயன்றதாகவும், ஆனால்தனது தொலைபேசி அழைப்புகள் ஏற்கப்படவில்லை என்றும் மோகன் கிருஷ்ணா குற்றம்சாட்டியுள்ளார்.

பொதுமக்களின் அடிப்படை பிரச்சனைகள் குறித்து சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அதிகாரிகளை தொடர்பு கொள்ளும் போது, அவர்களின் குறைகளை கேட்டு, சம்பந்தப்பட்ட இடத்தில் ஆய்வு செய்வது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒரு பகுதியில் சாலை பிரச்சனை குறித்து தொடர்ந்து புகார்கள் வந்தால், அந்த இடத்தை அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு, பிரச்சனையின் தீவிரத்தை அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

“55 ஆண்டுகளாக இங்கு வசிக்கிறோம்... பிரச்சனை சொன்னால் வரி கட்டவில்லை என்கிறார்கள்!”

இதற்கிடையில், அஸ்வத் லேஅவுட் வார்டு எண் 3 பகுதியில் சுமார் 55 ஆண்டுகளாக வசித்து வரும் பொதுமக்கள், தங்களது அடிப்படை பிரச்சனைகளை நகர சபை நிர்வாகத்திடம் எடுத்துச் செல்லும்போது, “நீங்கள் வரி செலுத்தவில்லை” என்று கூறி தங்களது கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதாக வேதனை தெரிவித்ததாக மோகன் கிருஷ்ணா கூறியுள்ளார்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த அவர், ஒரு பகுதியில் வசிக்கும் மக்களின் சாலை, குடிநீர், வடிகால் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளை அதிகாரிகள் உரிய முறையில் கவனிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

வரி தொடர்பான நிர்வாக விதிமுறைகள் ஒரு புறம் இருந்தாலும், பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் அவசர தேவைகள் தொடர்பான புகார்களை அதிகாரிகள் பரிசீலிக்க வேண்டும் என்பதே தனது கோரிக்கை என்றும் அவர் கூறியுள்ளார்.

சாலை மட்டுமல்ல... வடிகால் வசதியும் தேவை

அஸ்வத் லேஅவுட் பகுதியில் சாலை பிரச்சனைக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக மழைநீர் தேங்குவதும் இருப்பதாக கூறப்படுகிறது.

மழைநீர் செல்ல போதிய வடிகால் வசதி இல்லாத நிலையில், மழை பெய்யும்போது தண்ணீர் சாலைகளில் தேங்கி, சேறும் சகதியுமாக மாறுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் புதிய சாலை அமைத்தாலும், முறையான வடிகால் வசதி இல்லாவிட்டால் மீண்டும் சாலை சேதமடையும் வாய்ப்பு இருப்பதாகவும் மோகன் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.எனவே, சாலை அமைக்கும் பணியுடன் இணைந்து மழைநீர் வடிகால் வசதியையும் முறையாக ஏற்படுத்த வேண்டும். பிரச்சனைக்கு தற்காலிக தீர்வு மட்டுமின்றி, நீண்டகாலத்திற்கு பயன்படும் வகையில் நிரந்தர தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

“மக்களின் உயிருக்கும் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்”

“மக்கள் வரி செலுத்துகிறார்களா, இல்லையா என்பதைக் கடந்து, அவர்களின் உயிருக்கும் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். சாலை பிரச்சனையால் ஏற்கனவே பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் நிலையில், இனியும் காலதாமதம் செய்யாமல் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று மோகன் கிருஷ்ணா வலியுறுத்தியுள்ளார்.

அஸ்வத் லேஅவுட் மக்களின் பிரச்சனையை தொடர்ந்து அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்வோம் என்றும், பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் வசதிகளுக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க கோரிக்கை

தற்போது மழைக்காலம் என்பதால் அஸ்வத் லேஅவுட் பகுதி மக்களின் சிரமம் மேலும் அதிகரித்துள்ளது.

எனவே, கே.ஜி.எஃப் நகரசபை அதிகாரிகள் அஸ்வத் லேஅவுட் வார்டு எண் 3 பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும். சாலையின் தற்போதைய நிலையை ஆய்வு செய்து, பொதுமக்கள் பாதுகாப்பாக செல்லக் கூடிய வகையில் உடனடி சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதோடு, நீண்டகாலமாக நிலவி வரும் வடிகால் பிரச்சனைக்கும் நிரந்தர தீர்வு காண வேண்டும். பள்ளி மாணவர்கள், முதியவர்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பாக பயணிக்கக்கூடிய வகையில் சாலை வசதியை மேம்படுத்த வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது. அஸ்வத் லேஅவுட் மக்களின் இந்த நீண்டகால பிரச்சனைக்கு கே.ஜி.எஃப் நகர சபை நிர்வாகம் எப்போது நிரந்தர தீர்வு காணும்? மழைக்காலம் முடியும் வரை காத்திருக்காமல், பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே தற்போது அஸ்வத் லேஅவுட் மக்களின் முக்கிய எதிர்பார்ப்பாக உள்ளது.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



கன்னியாகுமரி மாவட்டம்.சர்வதேச முதியோர்கள் தினத்தையொட்டி வெள்ளமடம். விசுவாசபுரத்தில் அமைந்துள்ள புனித ஜோசப் வளாகத்தில் 110 2026ல் முதியோர்களுக்கு மாவட்ட .ஆட்சித் தலைவர் திரு.மு.பிரதாப் இ.ஆ.ப அவர்கள் பரிசுகளை வழங்கி அவர்களிடம் ஆசி பெற்றார். முதியோர் அனைவரும் ஆட்சித் தலைவரை வாழ்த்தினர்கள்.

### 842 கிராம ஊராட்சிகளில் அக்.2ல் கிராம சபைக் கூட்டம்:

## பொதுமக்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர், மாற்றுத்திறனாளிகள் திரளாக பங்கேற்க ஆட்சியர் வந்தனா கார்க் அழைப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 842 கிராம ஊராட்சிகளிலும், காந்தி ஜெயந்தியை முன்னிட்டு வரும் அக்.2ம் தேதி கிராம சபைக் கூட்டங்கள் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.



சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை ஆணையர் அறிவுறுத்தலின்படி நடைபெறும் இக்கிராம சபைக் கூட்டங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி, சம்பந்தப்பட்ட தனி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி செயலாளர்கள் மூலம் கிராம சபைக் கூட்டங்களை முறையாக நடத்துவதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கிராம சபைக் கூட்டத்தை சிறப்பாக நடத்துவதற்கு உதவியாக ஒரு பற்றாளரும், கூட்டம் நடைபெறுவதை கண்காணிக்கும் வகையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உதவி இயக்குநர் நிலையிலும், இணை இயக்குநர் நிலையிலும் ஒருங்கிணைப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கிராம சபைக் கூட்டங்களில் அந்தந்த பகுதிகளின் அடிப்படை தேவைகள், பொதுமக்களின் கோரிக்கைகள், ஊராட்சி வளர்ச்சிப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலன் சார்ந்த அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்களது கருத்துகளையும் கோரிக்கைகளையும் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும்.

எனவே, மாவட்டத்தில் உள்ள அனைத்து துறை அலுவலர்களும், 842 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த வாக்காளர்கள், பொதுமக்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களும் அக்.2ம் தேதி நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களில் பெருமளவில் தவறாமல் கலந்து கொண்டு, தங்களது கருத்துகளையும் கோரிக்கைகளையும் பதிவு செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.

## செய்யாறில் நள்ளிரவு ஆடு திருட்டுக்கு முற்றுப்புள்ளி! 17 ஆடுகள், 7 இருசக்கர வாகனங்கள் பறிமுதல்; 8 பேர் கைது; தனிப்படை போலீசார் அதிரடி நடவடிக்கை; வேலூர் சிறையில் அடைப்பு

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இரவு நேரங்களில் தொடர்ந்து ஆடுகளை திருடிச் சென்றதாக கூறப்படும் எட்டு பேர் கொண்ட கும்பலை தனிப்படை போலீசார் சுற்றிவளைத்து கைது செய்தனர். அவர்களிடமிருந்து 17 ஆடுகள் மற்றும் 7 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் செய்யாறு பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



செய்யாறு அருகே மோரணம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் ஆடுகள் திருடப்பட்டு வந்தன. இதுகுறித்து தொடர்ந்து புகார்கள் வந்த நிலையில், திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களை பிடிக்க காவல் ஆய்வாளர் மணிமாறன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது.

தனிப்படை போலீசார்பல்வேறுகோணங்களில் விசாரணை நடத்தி,ஆடுதிருட்டில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்ட நபர்களின் நடமாட்டத்தை கண்காணித்து வந்தனர். இந்நிலையில், நேற்று இரவு ஆடுகளை திருடிச் செல்ல முயன்ற கும்பலை போலீசார் சுற்றிவளைத்து பிடித்தனர். விசாரணையில், செய்யாறு மற்றும் ஆற்காடு பகுதிகளைச் சேர்ந்த விக்னேஷ் என்கிற விக்கி (35), தினேஷ் (23), குணால் (22), சக்கரவர்த்தி (29), சஞ்சய் (21), பாலாஜி (22), லோகேஷ், திவாகர், சிலம்பரசன் உள்ளிட்டோர் தொடர்புடையவர்கள் என போலீசார் தெரிவித்தனர். இதில் ஐயப்பன் என்பவர் தலைமறைவாக உள்ளதாக கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பல்வேறு இடங்களில் திருடப்பட்டதாக கூறப்படும் 17 ஆடுகள் மற்றும் 7 இருசக்கர வாகனங்களை போலீசார் பறிமுதல் செய்தனர். மீட்கப்பட்ட ஆடுகள் அவற்றின் உரிய உரிமையாளர்களிடம் போலீசாரால் ஒப்படைக்கப்பட்டன.

இதையடுத்து கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த போலீசார், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வேலூர் சிறையில் அடைத்தனர். மேலும் தலைமறைவாக உள்ள ஐயப்பனை பிடிக்கும் நடவடிக்கையிலும் போலீசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். செய்யாறு மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தொடர்ந்து ஆடுகள் திருடப்பட்டு வந்த நிலையில், ஆடு திருட்டில் ஈடுபட்டதாக கூறப்படும் கும்பலை தனிப்படை போலீசார் அதிரடியாக சுற்றிவளைத்து கைது செய்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



திண்டுக்கல் மாவட்டம் பழனி தொப்பம்பட்டி ஒன்றியம் தமிழக வெற்றி கழக தொப்பம்பட்டி ஒன்றிய செயலாளர் ஜின்னா அவர்களின் தாயாரே வீடு புகுந்துதாக்கிய மர்மநபர்கள்மீதுகடுமையாகநடவடிக்கைஎடுக்கவேண்டும் எனதமிழக வெற்றிக்கழக தொண்டர்கள் ஒன்று கூடி காவல்துறையிடம் மனு கொடுத்துவிட்டு வந்த போது எடுத்த படம்

## மதுராந்தகம் இடைத்தேர்தலில் நல்லூர் தவெக நிர்வாகிகள் தீவிர வாக்கு சேகரிப்பு

மதுராந்தகம் வேடந்தாங்கல் விநாயக நல்லூர் ஊராட்சியில் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எம்.எல். விஜய் பிரபு தலைமையில் மாதவரம் தொகுதி நல்லூர் ஊராட்சி தவெக நிர்வாகி கார்த்திக் உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் மதுராந்தக இடைத்தேர்தல் தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து விசில் சின்னத்திற்கு வீடு வீடாகச் சென்று தீவிர வாக்கு சேகரித்தனர்.



Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA